646

ளியீடு எண் 280.

திருஅம்பர்ப்பெருந்திருக்கோயில் திருப்பதிகம்

சம்பந்தர்

தருமபுர ஆதீனம்.

வெளியீடு எண் 280.

உ

குருபாதம்

திருஅம்பர்ப்பெருந்திருக்கோயில் திருப்பதிகம்

இது

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
இருபத்தைந்தாவது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருவுள்ளத்தின்படி வெளியிடப்பெற்றது

1952

உ

குருபாதம்

முன்னுரை

தருமபுர ஆதினம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாதஜன்மநக்ஷத்திர நாட்களில் திருப்பதிகம்பெற்ற சிவஸ்தலங்களில் ஆதீனச் சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப்பதிகத்தையும் அச்சிட்டு வழங்கிவருதல் போல, இம்மாதத்திலும் 11—12—52 அன்று திருஅம்பர்ப் பெருந்திருக்கோயில் ஸ்ரீ பிரமபுரிநாதசுவாமி ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப்பதிகம் அடங்கிய இவ்வெளியீடும் அன்பர்கட்கு வழங்கப்பெறுகின்றது. அன்பர்கள் யாவரும் பாராயணஞ்செய்து, பெருமான் திருவருளால் எல்லா நலன்களும் பெற்று உய்வார்களாக.

தலச்சிறப்பு

இத்தலம் சோழநாட்டுக் காவிரித்தென்பால் 54-வது திருத்தலமாகவைத்து எண்ணப்படுகிறது. கோச்செங்கட் சோழர் பணிபுரிந்து வழிபட்டபெருமையது; அருமறை ஓதிடும் அந்தணர்குலத் தோன்றலார்; சிவனார் இணையடி மறவாச் சிந்தையர்; சித்தந்தெளிவுற நாடொறும் நியதியின் அஞ்செழுத்தோதிடும் சீரியர்; அடியவர் எவரே ஆயினும், எதிரணைந்து அடிபணிந்து வந்தழைத்து அமுதூட்டும் சிறப்பியல்பினர்; உலகினிற் றுன்பம் வாராது சிவனருளம் மகிழ யாகங்கள் பல புரிந்தருளிய சிரேட்டர்; சுந்தரர்பால்

அன்புபூண்டு தூதுவளைக்கீரைகொண்டு தினமுங்கொடுத்து வரும் பணிபூண்ட பெருந்தகைமையார்; அரன்தொண்டு அடியவர்தொண்டு அஞ்செழுத்தோதிடும் வாய்மை அது கொண்டு அறுபகைசெற்ற அந்தணாளர்; சோமாசிமாற நாயனார் அவதரித்து வழிபட்டுப்பேறுற்ற சிறப்பினது; ஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம் பெற்றது.

ஆலயம் கிழக்குநோக்கியது. ஆக்குவித்தவர் கோச் செங்கட்சோழர். இதனை மாடக்கோயில், யானையேறுக் கோயில், பெருங்கோயில் என்றருள்வது ஆன்றோர் மரபு. இறைவன் பிரமபுரிநாதர். இறைவி பூங்குழல்நாயகி. இங்கு கர்ப்பக்கிருகத்துள் மூலவர்க்குப்பின்னே அம்மை அப்பர் திருவுருவங்களும் அமைந்துள்ளன.

திருவிழா வைகாசிமாதத்தில் ஆண்டுதோறும் நடைபெறுகின்றது. சோமாசிமாறர்செய்த யாக விழாவும் வைகாசி ஆயில்யநாளில் விசேடமாக நடைபெறுகின்றது. விருக்ஷம் புன்னை. தீர்த்தம் பிரமதீர்த்தம். இத்தலத்துத் தேவாரப்பதிகம் முற்றும் கோச்செங்கட்செம்பியர் பணியினைப் பாராட்டிப் போற்றுகின்றது.

இத்தலம் பூந்தோட்டம் புகைவண்டிநிலையத்திற்குக் கிழக்கே இரண்டுமைலில் உள்ளது.

திருஞானசம்பந்தசுவாமிகள் திருப்பதிகம்

பண் — காந்தாரபஞ்சமம்

இராகம் — கேதாரகௌளை] [தாளம் — ஆதி.

திருச்சிற்றம்பலம்

எரிதர வனல்கையி லேந்தி யெல்லியில்
நரிதிரி கானிடை நட்ட மாடுவர்
அரிசிலம் பொருபுன லம்பர் மாநகர்க்
குரிசில்செங் கண்ணவன் கோயில் சேர்வரே. 1

1. எரிகின்ற அனல் ஏந்திய திருக்கரத்தராய், நரிகள் திரிகின்ற காட்டினிடைநின்று, இரவினில் நடனமாடும்

எம்பெருமானார். அழகு திகழ்கின்ற மோதுகின்ற நீர் நிறைந்த அரிசிலாற்று வளம்செறிந்த திருஅம்பர்மாநகரம் இதனிடை கோச்செங்கட்சோழன் ஆக்கிய மாடக்கோயிலை இடமாக விரும்பி யுகந்து எழுந்தருளியிருந்தனர்.

மையகண் மலைமகள் பாக மாயிருள்
கையதோர் கனலெரி கனல வாடுவர்
ஐயநன் பொருபுன லம்பர்ச் செப்பியர்
செய்யகண் ணிறைசெய்த கோயில் சேர்வரே. 2

2. மைதீட்டிய கண்களுடைய உமையம்மையரைக் கொண்ட ஒருபாகத்தராகி, இருளிடத்துநின்று கையில் ஒரு கனலெரி கனன்றிட ஆடுவார். எந்தை, நல்ல நீர் மோதுறுகின்ற வளமிக்க அம்பர்மானகரிடை சோழன்,

சிவந்த கண்ணுடைய அரசன், (கோச்செங்கட்சோழன்) ஆக்கிய கோயிலை இடமாக்கொண்டுகந்து சேர்ந்து வீற்றிருப்பர்.

செம்பியன் - சோழன். இறை - அரசன்.

மறைபுனை பாடலர் சுடர்கை மல்கவோர்
பிறைபுனை சடைமுடி பெயர வாடுவர்
அறைபுன னிறைவய லம்பர் மாநகர்
இறைபுனை யெழில்வள ரிடம தென்பரே. 3

3. ஓசைமிக்க நீர்நிறைந்த வயல்கள்சூழ்ந்த அம்பர்மாநகரினை, வேதப்பாடல்களைப் பாடுபவராய், கையினிடத்து அக்கினி நிறைந்து விளங்கிட, திங்களணிந்து முடித்த

திருச்சடைகள் தாழ்ந்தசைந்து ஆடிட நட்டம் ஆடுவார் எந்தை, இறைவனது அழகுமிக்க இடமென்று சொல்வர்.

இரவுமல் கிளமதி சூடி யீடுயர்
பரவமல் கருமறை பாடி யாடுவர்
அரவமோ டுயர்செம்ம லம்பர்க் கொம்பலர்
மரவமல் கெழினகர் மருவி வாழ்வரே. 4

4. இரவிடை நிறைந்த, இளம்பிறையினைசூடியவ ராகி, ஒப்பு இணையிலதாய், உயர்வாம் தன்மைமிக்க, பரவிடுதற்கு, நிறைந்த புகழுடையதாய், யாவரும் உணர் தற்கு அரிய தன்மைவாய்ந்த, வேதப்பாடல்களைப் பாடுபவ ராய் ஆடுவார். எந்தை, யாவராலும் போற்றுதலோவாத ஓசையோடு, உயர்ந்த செம்மைப்பாடமைந்த, மலர்கள்

நிறைந்த, கொம்புகளோடு மரங்கள் பல நிறைந்து, அழகு திகழ்கின்ற இவ் அம்பர்மாநகரினை இடமாக்கொண்டு மருவி வாழ்வர்.

சங்கணி குழையினர் சாமம் பாடுவர்
வெங்கனல் கனறர வீசி யாடுவர்
அங்கணி விழவமர் அம்பர் மாநகர்ச்
செங்கண னிறைசெய்த கோயில் சேர்வரே. 5

5. அழகிய சங்கக்குழையணிந்த திருக்காதினர், சாம வேதம் பாடும் திருவாயினர், கையில் கனலெரி கனன்றிட கைவீசி ஆடுகின்ற இறைவர், அழகிய விழாமிக்கு பொருந்தித் திகழ்ந்துறுகின்ற அம்பர்மாநகரிடை செங்கட்சோழர் செய்த கோயிலை இடமாக்கொண்டு வீற்றிருந்தருளுபவர்.

கழல்வளர் காலினர் சுடர்கை மல்கவோர்
சுழல்வளர் குளிர்புனல் சூடி யாடுவர்
அழல்வளர் மறையவ ரம்பர்ப் பைம்பொழில்
நிழல்வளர் நெடுநக ரிடம தென்பரே. 6

6. ஓசை வளர்கின்ற சிலம்பணிந்த சேவடியராய், சுழற்பெருக்கமிக்க குளிர்ந்தநீர்க் கங்கையணிந்த சென்னியராய், நிறைந்துறும் அனல் ஏந்திய திருக்கரத்தராய் ஆடுகின்ற எந்தையாரது இடம் என்று சொல்லுவர். அக்கினி காரியங்களை வளர்க்கின்ற அந்தணர்களோடு பசிய நிழல் வளர்கின்ற சோலைகள் செறிந்து நீண்ட அம்பர்மா நகரத்தினை.

09780

இகலுறு சுடரெரி யிலங்க வீசியே
பகலிடம் பலிகொளப் பாடி யாடுவர்
அகலிட மலிபுக ழம்பர் வம்பவிழ்
புகலிட நெடுநகர் புகுவர் போலுமே. 7

7. பகலிடத்து பிச்சைகொள்ளும் இயல்பினனாய்ப் பாடல்களைப்பாடி, இரவினில் எரிவிளங்கவீசிய கையராய் நின்று நடனமாடுவோன் எம்பெருமானார். உலகிலே நிறைந்த புகழோடு பொருந்தியதாய், மணம் அவிழ் அரும் புகள் மலர்கின்ற பொழில் வளத்ததாய், யாவர்க்கும் புகலிடமதாய்த் திகழ்கின்ற இவ்வம்பர்மாநகரிடைப் பெருந் திருக்கோயில்புக்கு வீற்றிருந்தருள்வர்.

எரியன மணிமுடி யிலங்கைக் கோன்றனை
கரியன தடக்கைக ளடர்த்த காலினர்
அரியவர் வளநக ரம்ப ரின்பொடு
புரியவர் பிரிவிலாப் பூதஞ் சூழவே. 8

8. இப்போதும் சிவந்தமணிகள் பதித்த முடியணிந்த இலங்கையரசன் இராவணனது, கருமைமிக்குப் பருத்த கைகள் (கயிலை எடுத்தஞான்று) ஒடிந்திற்றிட, அடர்த்தருளிய திருக்காலினர், யாவர்க்கும் உணர்தற்கும் காண்டற்கும் அருமையர் எம்பெருமான் ஆயினும் இங்கு வளமிக்க இவ் அம்பர்மாநகரினை இடமாக்கொண்டுகந்து, மாறிலா இன்பவடிவினர்களாகிப் போற்றுதலைப்புரிகின்ற அடியர்களோடு, பிரிவிலாத பூதகணங்களும் சூழ்ந்துற, வீற்றிருந்தருள்வர்.

வெறிகிளர் மலர்மிசை யவனும் வெந்தொழில்
பொறிகிள ரரவணைப் புல்கு செல்வனும்
அறிகில வரியவ ரம்பர்ச் செம்பியர்
செறிகழ லிறைசெய்த கோயில் சேர்வரே. 9

9. மணங்கிளர்ந்தெழுகின்ற மலர்மேலுறை நான்முகனும், கொடியதாம் தொழில் கிளர்ந்தெழுகின்ற பொறிகளோடு பொருந்திய பாம்பினை அணையாகக்கொண்டு பொருந்திய செல்வராம் திருமாலும், அறிந்திடுதற்கிலாதவர், யாவர்க்கும் அருமையர், எம்பிரான் அம்பர்மாநகரிடைச் செம்பியன்செய்த திருக்கோயிலிடை இங்கு வீற்றிருந்தருள்வர்.

வழிதலை பறிதலை யவர்கள் கட்டிய
மொழிதலைப் பயனென மொழியல் வட்மினோ
அழிதலை பொருபுன லம்பர் மாநகர்
உழிதலை யொழிந்துள ருமையுந் தாமுமே. 10

10. வழுக்கைத் தலையர், மயிர்பறித்த தலையர், சமணர் முதலியோர் கட்டியமைத்த பொய்மையதாய பேச்சுக்களை மெய்யென, உறுபயன் தருவதெனக் கொள்ளாதீர்கள்! பேசாதீர்கள்! வருவீர்களாக! பெருக்கமிக்கு அழித்தலைப் புரிவதாய் நிறைந்துறும் நீர்வளம்செறிந்த அம்பர்மாநகரிடை, எங்கணும் சென்று திரிகின்ற இயல்பின் நீங்கியவராய், அம்மையப்பனாய் என்றும் மன்னி வீற்றிருந்தருள்வர். வணங்கிப் போற்றுவீர்களாக!

அழகரை யடிகளை அம்பர் மேவிய
நிழறிகழ் சடைமுடி நீல கண்டரை
உமிழ்திரை யுலகினி லோதுவீர் கொண்மின்
தமிழ்கெழு விரகினன் றமிழ்செய் மாலையே. 11

11. அழகனை, அம்பர்மாநகரிடை பெருங்கோயில் மேவிய அடிகளை, ஒளிதிகழும் சடைமுடிநாதனை, நீலகண்டனைத் தமிழ்விரகன் ஞானசம்பந்தன் தமிழால் செய்து போற்றிய இம்மாலையை உள்ளத்திலே கொள்வீர்களாக! திரைக்கடல் சூழுலகினில் உறுபயன் உற்றிட விரும்புவீர்! ஓதுவீர்களாக.

திருச்சிற்றம்பலம்.

திருவாசகம்

திருச்சிற்றம்பலம்

அன்பினா லடியே னாவியோ டாக்கை
ஆனந்தமாய்க் கசிந்துருக
என்பர மல்லா இன்னருள் தந்தாய்
யானிதற் கிலனோர்கைம்மாறே
முன்புமாய்ப் பின்பு முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவபெரு மானே
சீருடைச் சிவபுரத்தரைசே.

திருச்சிற்றம்பலம்.

திருவிசைப்பா

திருச்சிற்றம்பலம்

ஏகநாயகனை யிமையவர்க்கரசை
    யென்னுயிர்க்கமுதினை யெதிரில்
போகநாயகனைப் புயல்வணற்கருளிப்
    பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநாயகனை மிகுதிருவீழி
    மிழலைவிண் ணிழிசெழுங்கோயில்
யோகநாயகனை யன்றிமற்றொன்றும்
    உண்டென வுணர்கிலேன்யானே.

திருச்சிற்றம்பலம்.

திருப்பல்லாண்டு

திருச்சிற்றம்பலம்

புரந்தரன் மாலயன் பூசலிட்டோலம்
இட்டின்னம் புகலரிதாய்
இரந்திரந் தழைப்ப வென்னுயிராண்ட
கோவினுக் கென்செயவல்லவ மென்றும்
கரந்துங் கரவாத கற்பகனாகிக்
கரையில் கருணைக்கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப் பாங்கர்க்கே
பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்.

பெரியபுராணம்

திருச்சிற்றம்பலம்

யாழின் மொழியாள் தனிப்பாகரைப் போற்றும்யாகம்
ஊழின் முறைமை வழுவா துலகங்களான
ஏழும் உவப்பப் புரிந்தின்புறச் செய்தபேற்றால்
வாழும்திறமீசர் மலர்க்கழல் வாழ்த்தலென்பார்.

திருச்சிற்றம்பலம்.

ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமபுரம். 10—12—52.

தருமபுர ஆதீன வெளியீடு.

திருக்குறள் - உரைவளம்.

பொருட்பால்.

கிரௌன் 1 x 4 சைஸ் 1128 பக்கங்கள்.

காலிகோபைண்டு	...	ரூ. 13—8—0.
தபாற்செலவு வகையரு	...	ரூ. 1—8—0.

காமத்துப்பால்

கிரௌன் 1 x 4 சைஸ் 536 பக்கங்கள்.

காலிகோபைண்டு	...	ரூ. 6—0—0.
தபாற்செலவு வகையரு	...	ரூ. 1—0—0.

கிடைக்குமிடம்: **மானேஜர்**, தருமபுர ஆதீனம்.
தருமபுரம், மாயூரம் P. O. தஞ்சை ஜில்லா.